### திட்டக்குடி சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச.27-**

**கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலை, எழுத்தூர் கிராமம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை, எழுத்தூர் கிராமம் அருகில் இன்று மாலை சுமார் 7.30 மணியளவில் திருச்சியிலிருந்து சென்னை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரசுப் பேருந்தின் முன்பக்க டயர் எதிர்பாராதவிதமாக வெடித்ததில் பேருந்து தன் கட்டுப்பாட்டை இழந்து, சாலையின் தடுப்பை தாண்டி எதிர்ப்புற சாலையில் சென்றுகொண்டிருந்த இரண்டு கார்கள் மீது மோதிய விபத்தில் இரண்டு கார்களிலும் பயணம் செய்த ஐந்து ஆண்கள் மற்றும் நான்கு பெண்கள் உட்பட ஒன்பது நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில், பலத்த காயமடைந்து அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் இரண்டு குழந்தைகள் உட்பட நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த ஒன்பது நபர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

### திருவண்ணாமலை — திருக்கோவிலூர் சாலையில்

# “வேளாண் கண்காட்சி - கருத்தரங்கம்” முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



**சென்னை, டிச. 27-**

**திருவண்ணாமலை திருக்கோவிலூர் சாலையில் அரசு மேல்நிலைபள்ளி எதிரில் முதலமைச்சர் அவர்களால் டிசம்பர் 27, 2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு 27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரு தினங்களில் நடைபெறும் ”வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்-2025” விழாவில் உழவர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்றுப் பயன்பெற வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அழைப்பு விடுத்துள்ளார்.**

**இது குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அழைப்பு வருமாறு:**

தமிழ்நாட்டில் உழவர்களின் நலனை முன்னிறுத்தும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021-22 ஆம் ஆண்டில், வேளாண்மைத்துறை, வேளாண்மை- உழவர் நலத்துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், தமிழ்நாட்டின் வரலாற்றில் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையும் அறிமுகப் படுத்தப்பட்டது. வேளாண்மை, சார்புத் துறைகளுக்கென கடந்த ஐந்து வேளாண்மை நிதி நிலை அறிக்கைகளில் ரூ.1,94,076 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**வேளாண் வணிகத் திருவிழா!**

இவற்றின் ஒரு பகுதியாக, உழவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் ஆண்டுதோறும் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், இந்த ஆண்டின் முதல் “வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்” தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 11.06.2025 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகில் விஜயமங்கலத்திலும், இரண்டாவதாக ”வேளாண் வணிகத் திருவிழா” நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் 27.09.2025 அன்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றன. உழவர் பெருமக்கள், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் திரளாகப் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டின் மூன்றாவது நிகழ்வாக வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், உயர்விளைச்சல் தரவல்ல புதிய பயிர் இரகங்கள், பாரம்பரிய இரகங்கள், அறுவடை பின்சார் மேலாண்மை நுட்பங்கள், மதிப்புக்கூட்டும் நுட்பங்கள், வேளாண்மையில் மின்னணு தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்தும் நுட்பங்கள், உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு நுட்பங்கள், பயிர்க்கடன், பயிர்க்காப்பீடு உள்ளிட்ட சேவைகள், ஏற்றுமதி தொடர்பான விழிப்புணர்வு போன்ற பல்வேறு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து விவரங்களையும் உழவர்கள், மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்தும் அமைப்புகள், ஏற்றுமதியாளர்கள் இயற்கை நல ஆர்வலர்களிடையே கொண்டுசேர்த்திடும் வகையில் வரும் 27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரு தினங்களில் திருவண்ணாமலை திருக்கோவிலூர் சாலையில் அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் “வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு - 2025” விழாவினை மிகச்சிறப்பாக நடத்த தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்துவருகிறது.

**முதல்வர் தொடங்கி வைக்கிறார்!**

இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.12.2025) தொடங்கி வைத்து, 80,571 உழவர்களுக்கு ரூ.669 கோடி மதிப்பிலான திட்டப் பலன்களை வழங்கிச் சிறப்பிக்க உள்ளார்கள்.

வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, ஒன்றிய அரசின் வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்ற அரசுத் துறைகள் தங்கள் செயல்பாடுகள், திட்டங்களைக் காட்சிப்படுத்த உள்ளார்கள், நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், விதை ஆகியவற்றின் உற்பத்தியாளர்கள், வங்கிகள், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டு வேளாண் உற்பத்திக்குத் தேவையான புதிய இரகங்களின் விதைகள், காய்கறி விதைகள், பழ வகைகளில் ஒட்டு இரகக் கன்றுகள், தென்னையில் வீரிய ஒட்டுக் கன்றுகள், நுண்ணூட்ட உரக்கலவை, உயிர் உரங்கள், இயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் மற்றும் நவீன உபகரணங்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் உள்ளார்கள்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவங்கள், பாரம்பரிய உணவு உற்பத்தி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்கள் உணவு பதப்படுத்தும் அமைப்புகளும் பங்கேற்கின்றன.

இதற்கென 250க்கும் மேற்பட்ட உள் மற்றும் வெளிப்புறக் காட்சி அரங்குகள் அமைக்கப்படுள்ளன.

நெல் சாகுபடித் தொழில்நுட்பங்கள், கரும்பில் பூச்சி, நோய் மேலாண்மைக்கான நவீன தொழில்நுட்பங்கள், இயற்கை மற்றும் உயிர்ம வேளாண்மை தொழில்நுட்பங்கள், வேளாண்மைப் பொறியியல் துறை திட்டங்களின் இன்றைய நிலையும் எதிர்காலத் தேவைகளும், பயறு வகைப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உத்திகள், காய்கறி உற்பத்திக்கான உயர் தொழில்நுட்பங்கள், மலர்கள் சாகுபடிக்கான உத்திகள், எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான உயர் விளைச்சல் தொழில்நுட்பங்கள், பண்ணை வருமானத்தை உயர்த்துவதற்கு ஏற்ற உப தொழில்கள், உயர் வருமானம் பெற மண்டலத்திற்கேற்ற வேளாண் காடுகள், சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய இரகங்களின் மருத்துவ குணங்கள், மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் பொருட்களின் விநியோகத் தொடர் மேலாண்மை, வேளாண்மையில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் விவசாயிகள் தங்களின் அனுபவத்தின் மூலம் வகுத்துள்ள தீர்வுகள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்படும். இக்கருத்தரங்குகளில் தொழில்நுட்ப வல்லுநர்களும், அனுபவமிக்க வேளாண் பெருமக்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு பல்வேறு பயனுள்ள தகவல்களை பகிர்ந்து கொள்ள இருக்கிறார்கள்.


வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பெருவாரியான வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்காக, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் உழவர்களை அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு முதலமைச்சர் அவர்களால் 27.12.2025 அன்று துவக்கி வைக்கப்பட உள்ள வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் உழவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டு பயன்பெறக் கேட்டுக்கொள்கிறேன் என்று வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடலாடி அ. பிரணவநாதன்

### டிசம்பர் 27 (2010)



இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியக் கழகச் செயலாளராக இருபது ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஒரு முறை மாவட்ட துணைச் செயலாளராகவும், இரண்டு முறை தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கடலாடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றிபெற்று அந்தத் தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# கபட நாடகம் நடத்தி வரும் காந்தி தேசத்துக் காவி வேடதாரிகள்!!



கவிஞர்
**தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

இந்தியா கூட்டணியைச் சார்ந்த திமுக, காங்கிரஸ், இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்த போதும், ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் மோடி அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை மக்களவையில் அராஜகமான முறையில் நிறைவேற்றி உள்ளது .

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை (MGNREGA) மாற்றி அமைப்பதாகக் கூறி ஒன்றிய அமைச்சரவையில் மோடி அரசு முடிவெடுத்தது . அத்திட்டத்தையே ஒழித்துக் கட்டும் வகையில், ‘வி.பி.ஜி. ராம்ஜி (‘ The Viksit Bharat Guarantee Rozgar and ajeevika mission Gramin - VB G RAM G) என்று மதவெறி பிடித்த மோடியின் பா.ஜ.க. அரசு கொண்டு வந்த அறிமுக நிலையில் இந்தியா கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. கடந்த 18.12.2025 அன்று அம் மசோதாவை எதிர்த்து, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மல்லிகார்ஜுனா கார்கே, பிரியங்கா காந்தி, கனிமொழி கருணாநிதி, டி.ஆர்.பாலு, ஆ.இராசா (தி.மு.க. எம்.பி.கள், மற்றும் சு.வெங்கடேசன் உள்ளிட்ட இடதுசாரி உறுப்பினர்கள்முகமது பஷீர் (முஸ்லிம் லீக்) அரவிந்த் சாவந்த் (சிவ சேனா உத்தவ் தாக்கரே பிரிவு) சிவசேனா ஆகியோரும் மற்ற கட்சியினரும் கலந்து கொண்டு கடுமையாக எதிர்த்துப் போராடிப் பேசி உள்ளனர்.

பா.ஜ.க. அரசு பதவி ஏற்ற போது, நிதி அமைச்சராக இருந்த அருண்ஜெட்லி நிதிநிலை அறிக்கையிலும், வெளியான பொருளாதார அறிக்கையிலும் “இத்திட்டக் குறைபாடுகள் நீக்கப்பட்டு வேளாண்மைப் பணியுடன் இத்திட்டம் இணைக்கப்பட்டுத் தொடரும்” என்று உறுதிப்படுத்தி யிருந்தார் . ஆனால், காற்றோடு கலந்த ஒப்பாரிப் பாடலாகி விட்டது.

2004 ஆம் ஆண்டு காங்கிரசு, தி.மு.க., இடதுசாரிகள் அமைப்புகள் உள்ளிட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்த போது, நாடாளுமன்றத்தில் அதே ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் தாக்கல் செய்யப்பட்டது. அதிலுள்ள பாதகமான அம்சங்களை நீக்க தி.மு.க., இடதுசாரிகள் வலியுறுத்திய பின் அவை 39 திருத்தங்களுடன் நீக்கப்பட்டு 25.08.2005 இல் நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவர் ஒப்புதல் 02.02.2006 இல் கிடைத்ததும், முதல் கட்டமாக 200 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. இரண்டாவது கட்டமாக 01-04-2007 முதல் 130 மாவட்டங்களில் விரிவுபடுத்தியும், மூன்றாவது கட்டமாக 01-04-2008 முதல் மீதி உள்ள மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டும் வந்தன.

உடல் உழைப்பு வேலையை செய்ய கூறுபவர்கள் கிராம ஊராட்சியில் பதிவு செய்து வேலை அட்டை பெற வேண்டும்; பயனாளிகளிடம் வேலைக்கான அட்டை இருக்க வேண்டும்; அதற்கான ஒப்புதல் இரசீது அளிக்கப்பட வேண்டும்; 15 நாட்களுக்குள் தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு வேலை அளிக்கப்பட வேண்டும்; 15 நாட்களுக்குள் வேலை அளிக்காப்படில், வேலை இல்லாக்காலம் சம்பளம் அளிக்க வேண்டும். ஆண்டுக்கு ஆறு முறை நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் முடிவு செய்ய வேண்டும். வேலை 8 மணி நேரமாகும். ஆண், பெண்ணுக்குச் சம கூலி வழங்கப்பட வேண்டும்; 100 நாள் வேலை செய்த குடும்பங்களில் 40% பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி குடும்பங்களாகும். மூன்றில் ஒரு பங்கு மகளிர்க்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இப்போது 50% பெண்கள் வேலை செய்கின்றனர். ஏழு நாட்களுக்குள்ளாக அளிக்கப்படும் அவர்கள் தரும் புகார்கள் மீது நடவடிக்கை எடுத்து நீக்கப்படுவதுடன், அதனைப் புகார் அளிப்பவர்க்குப் உரிய பதில் தர வேண்டும்; வெளிப்படைத் தன்மைச் செயல்பாடுடன் பதிவேடுகள் வைக்க வேண்டும்; இதனால், சமூகப் பாதுகாப்பு கிடைக்கும்.

இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு இடுகாடு, சுடுகாடு கட்டிடங்களுக்குக் கட்டுமானங்கள் அமைத்தல், ஊரகச் சொத்துக்களைப் பராமரித்தல், தண்ணீர் சேமிப்பு, அறுவடை செய்தல், வறட்சி நிலை தடுத்தல், கண்மாய், ஏரி, குளங்கள், கால்வாய்கள் தூர் வாருதல், தானியங்கள் சேமித்தல், பொது பணிமனை அமைத்தல், சுடுகாடு, பள்ளிக்கூடம், அங்கன்வாடி, விளையாட்டுத்திடல் அமைத்தல் என பணிகள் அளிக்கப்பட்டு வந்தது. இச்சட்டம் மூலம் வேலைவாய்ப்பு அளித்ததன் மூலம் கிராமப்புறக் குடும்பங்களில் ஓரளவு பசிப்பிணி போக்கும் அளவிற்கு உணவு தானியம் வாங்க வாய்ப்பு அளிக்கப்பட்டது.நீர் பாதுகாப்பு, நீர் சேகரிப்பு, பள்ளம் வெட்டுதல், கரை அமைத்தல், பாறையிலான தடுப்பு, பூமிக்கு அடியிலான நீர் வரத்து அமைத்தல், மண் அணை, தடுப்பணை கட்டுதல், நீரூற்று மேம்பாடு, மரத்தோட்டங்கள், காடு வளர்ப்பு, வறட்சி நீக்கம், நுண்ணிய மற்றும் சிறுநீர் பாசன வேலைகள், பாசன கால்வாய்கள், பாசன வசதி ஏற்படுத்தல், பண்ணைக் குட்டைகளைத்தோண்டுதல், தோட்ட பயிர், மரத்தோட்டங்கள், பண்ணை கரை அமைத்தல், ஏரி வண்டல் மண் நீக்குதல் உள்ளிட்ட பாரம்பரிய நீர்நிலைகளைப் புதுப்பிக்கப்பட வேண்டும்.

2005 ஆம் ஆண்டு டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் கொண்டுவரப்பட்டது திட்டத்தின் படி நிதியாண்டு ஊரகப் பகுதிகளில் குறைந்தபட்ச 100 நாட்களுக்கு ஊதியத்துடன் வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் ஒவ்வொரு பகுதி குடும்பங்களில் வாழ்வாதார பாதுகாப்பு மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை நோக்கமாக இந்தியாவில் 741 மாவட்டங்களைச் சேர்ந்த 7212 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்படுத்தப்பட்ட 2.69 லட்சம் கிராம ஊராட்சி பகுதிகள் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வந்தன. தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களைச் சேர்ந்த 368 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 12 ஆயிரத்து 525 கிராமங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் 2006-இல் 65 ரூபாய், 2012இல் ரூபாய் 115, 2013ஆம் ஆண்டு ரூ.125, பிறகு ரூ .329 தற்போது ரூ.365 என்று கூலி உயர்த்தப்பட்டதாக வெற்று விளம்பரங்களால் சொல்லப்பட்டனவே ஒழிய, உரிய நிதி ஒன்றிய அரசால் வழங்கப்படவில்லை . 2013 -14 நிதி ஆண்டில் ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு ரூபாய் 39,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி வந்த பின்பு, அந்நிதி குறைக்கப்பட்டு 2014- 15 நிதியாண்டில் ரூபாய் 24,000 ஆயிரமானது. இத்திட்டத்தின் மூலம் 92 லட்சம் பேர் பயன் பெறுகின்றனர் என்று 100 நாள் வேலை திட்டத்திற்கு பதிவு செய்தது. அதில் இந்த ஆண்டு மட்டும் 33,000 நபர்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு நீக்கி உள்ளது. “மாநில வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) அலுவலகம் செய்து வந்த மேற்பார்வைப் பணியை இனி டெல்லியில் இருந்து நிர்வகிக்கப் போகிறார்கள்” என்று ஒன்றிய அரசுச் சட்டம் கூறுகிறது. முதலில் 100 விழுக்காடு ஊதியத்தை ஒன்றிய அரசு வழங்கி வந்த நிலையில் இனிமேல் ஒன்றிய அரசு 60% மாநில அரசு 40% என நிதி ஒதுக்கீடு மாற்றி அமைத்துள்ளது. இதனால் ஆண்டுக்கு சுமார் ரூபாய் 4,000 கோடி மாநில அரசு வழங்க வேண்டிய கடுமையான நிதிச் சுமையை ஏற்படுத்தி உள்ளது . ஏற்கனவே மாநில அரசுக்குத் தர வேண்டிய நிதியை மோடி அரசு வந்த பின்னர் நிறுத்தப்பட்டுவிட்டது. 100 நாள்களுக்கு வேலை என்று சொல்லி 30 நாட்கள் கூட வேலை இல்லாமல் உரிய பணம் வராததால், பலமுறை தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின், மோடி அரசிடம் நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும், கோரிக்கை வைத்தும், நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் பேசியும் செவி சாய்க்கவில்லை.

இதனால் நிதி ஆதாரங்கள் கிடைக்காமல் இருக்கும் நிலையில், மாநில அரசுக்கு சுமார் கூடுதலாக சுமார் 50,000 கோடி வரை செலவு கூடும். ஏற்கெனவே, ஒன்றிய அரசால் அறிமுகம் செய்யப்பட்ட பல திட்டங்களில் பல மாநிலங்கள் செலுத்த வேண்டிய 50 விழுக்காடு பங்கை செலுத்த முடியாமல் திணறி வருகிறது.

இத்திட்டம் தொடங்கிய போது ஒட்டுமொத்த கூலியையும், ஒன்றிய அரசுதான் வழங்கி வந்தது. எனினும், பின்னர் மாநில அரசின் பங்கு 10% சதவீதமாக இருந்தது. பிறகு அதனை 25% ஆக உயர்த்தினார்கள். மேலும் 27 லட்சத்திற்கு மேலான ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, மலைவாழ், மகளிர் என உழைக்கும் கூலி மக்களை இரக்கமின்றி பா.ஜ.க. அரசு நீக்கியது. கொடுக்கப்பட வேண்டிய கூலியை முற்றிலும் நிறுத்தினார்கள். திட்டங்கள் யாவும் சீர்குலைக்கப்பட்டன. களப்பணிகளில் ஈடுபட்ட மக்கள் இன்னும் வேலை பார்த்ததற்கான கூலி வாங்காமல் தவிக்கின்றனர். மாநில அரசுக்குத் தரவேண்டிய நிதிப் பகிர்வை மூர்க்கத்தனமான ஒன்றிய மோடி அரசு தரவில்லை. முதல்வர் தளபதி மு. க. ஸ்டாலின் தமிழ்நாட்டுக்குமூன்று மாதமாக தரப்பட வேண்டிய ரூ.1,056 கோடியை உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று மோடி அரசுக்குப் பல நினைவூட்டும் கோரிக்கைக் கடிதங்கள் எழுதியும் ஒதுக்கிட முன் வந்ததில்லை. 220 நாட்கள் அதாவது 5 மாதம் கழித்து ரூபாய் 2,999 கோடியை மோடியரசு விடுவித்தது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்திற்கு மாற்றாகக் கொண்டு வரப்பட்ட’ வி.பி.ஜி. ராம் ஜி’ மசோதா என மோடி அரசு கொண்டு வந்த பித்தலாட்ட சட்டத்தின் படி பல ஏமாற்று வித்தைகளை பதிவு செய்திருக்கிறது. முந்தைய சட்டத்தில் 100 நாட்கள் வேலை நாள் என்று இருப்பதை மாற்றி 125 நாள்கள் என விஷம் தடவியும், பழைய சட்டத்தின் நிதி பங்களிப்பு 100% ஒன்றியரசு என்று இருந்ததை தற்போது மாற்றி ஒன்றிய அரசு 60%, (60:40) விதத்திலும், அதிலும் பதிந்து நாட்களில் ஊதியத்தை அளிப்பது என்று பழைய சட்டத்தில் இருந்தது என்பதை திருத்தமாக; இப்பொழுது நிதியே ஒதுக்காமல், ஒதுக்கிய நிதி தராமல் ஏழு நாட்கள் அல்லது கூலியை15 நாட்களில் கொடுப்பதாகவும், ‘கிராமப்புற வறுமையை ஒழிப்பது’ பழைய சட்டத்தின் இலக்காக இருந்ததை மாற்றி’ வளர்ந்த பாரதம் திட்ட’த்தில் இணைப்பதாகவும் கூறி மோசடி நாடகம் நடத்தி உள்ளது மோடி அரசு .

விதைப்பு, நடவு மற்றும் அறுவடை என 60 நாள் வேளாண் பருவக் காலங்களில் விவசாயப் பணிகளுக்கு வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் அழைக்கக்கூடாது என்றும், பயோமெட்ரிக் அங்கீகாரம் உட்பட விரிவான டிஜிட்டல் முறையில் கண்காணிக்கப்படும் என்றும், ஜி.பி.எஸ். அல்லது மொபைல் போன் வழியாக பணி இடத்தை மேற்பார்வையிடுவது என்றும், மோசடிகளை தடுக்க ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தப்படும் என்றும், மிரட்டுகிற வகையில் கபட நாடகத்துடன் பாஜக அரசு இந்தக் கருப்புச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது .

இத்திட்டத்தைத் தொடங்கிய காங்கிரஸ் ஐ.மு கூட்டணி அரசு முழு நிதியும் ஒன்றிய அரசுதான் தந்த நிலையில், புதிய சட்டப்படி வடகிழக்கு மாநிலங்கள்- இமயமலை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் விகிதாச்சாரம் 90:10 என்று இது பகிர்வு இருக்கும் என்றும், சொல்லப்பட்டுள்ளது. சட்டசபை கொண்ட மற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு விகிதம் 60:40 ஆகும் என்று மோடியின் பா.ஜ.க. அரசு நிதிச் சுமையை மாநில அரசுகளுக்கு ஏற்றி வைத்துள்ளது.

இதனால் நிதி ஆதாரங்கள் கிடைக்காமல் இருக்கும் நிலையில், மாநில அரசுக்கு சுமார் கூடுதலாக சுமார் 50,000 கோடி வரை செலவு கூடும். ஏற்கெனவே, ஒன்றிய அரசால் அறிமுகம் செய்யப்பட்ட பல திட்டங்களில் பல மாநிலங்கள் செலுத்த வேண்டிய 50 விழுக்காடு பங்கை செலுத்த முடியாமல் திணறி வருகிறது. இந்தப் புதிய சட்டப்படி ரூபாய் 1.5 இலட்சம் கோடி செலவாகும் என மதிப்பிட்ட நிலையில், ஒன்றிய அரசு ரூபாய் 95,692 கோடி மட்டுமே வழங்கும் எனத் தெரிகிறது.

தொழில்நுட்பம் மூலம் திட்டம் தகர்ப்பு பயோமெட்ரிக் அங்கீகாரம், பரிவர்த்தனைகள் டிஜிட்டல் மயமாக்குதல் மொபைல் செயலி அடிப்படைகளான கண்காணிப்பு போன்ற சர்ச்சைக்குரிய பாகுபாடு காட்டுவதால் நோக்கமே சிதைக்கப்படுகிறது என தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு எழுப்பி வருகின்றன.125 நாள் அதிகரித்திருக்கிறோம் என்று சொல்வது வெற்றுப் பேச்சே ஆகும். ஏற்கெனவே, இருந்த 100 நாள் வேலையில் 50 நாள் கூட வேலை வாய்ப்பு தராததும், இதையும் ஒதுக்காத மோடி அரசு, கடுமையான விதிகளை புகுத்தி சட்டத்தில் சொல்லி உள்ளது. ஆகவே சட்டபூர்வ உரிமைகள் பறித்துள்ள புதுடன் மாநில அரசு தலையில் சுமையை ஏற்றியுள்ளது. இச் சட்டமான கிராமப்புற தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை சீர்குலைப்புடன் உயிர் நாடியை அழிப்பதால், இச்சட்டத்தை எதிர்க்கப்பட வேண்டும்.

ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவேன் என்று பொய் வாக்குறுதி தந்த ஜெர்மனி நாட்டின் ‘கோயபல்ஸ் ‘ போன்றவர்களை வென்ற மோடி, இப்பொழுது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் உருவாக்கிய கிராமப்புற வேலைகளையும் பிடுங்கி; தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மகளிர் சுயநிதியினர் என ஏழை, எளிய உழைக்கும் வர்க்க மக்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டார்.

இது சர்வாதிகாரிகள் ஆட்சியில் சித்திரவதைக் கூடங்களில் கை, கால்களைக் கட்டி , முள் மெத்தையில் படுக்க வைத்து, அடித்துத் துவைத்து, மின்சாரத்தைப் பாய்ச்சுவது போல் மாநிலங்களின் நிலையை உருவாக்கி ஆணவம் பிடித்த பா.ஜ.க. அரசின் சட்டத்தால் முடக்கிப் போட்டுள்ளது. இப்படியான காட்டுமிராண்டிச் சட்டத்தை எதிர்த்து போராட முன் வராத எடப்பாடி பழனிசாமிகள் கூட்டம் ஊழல் சகதியில் ஆமை போல் பதுங்கியுள்ளனர்.

“இந்திய கிராமப்புறங்களில் உயிர்நாடியாக இருந்த பல கோடி ஏழை, எளிய மக்களின் வறுமையைப் போக்கிய மகாத்மா காந்தி 100 நாள் வேலைத்திட்டத்தைப் பா.ஜ.க. அரசு திட்டமிட்டு முடக்கியுள்ளது என்றும்; காந்தி பேரையே நீக்கி மக்களுக்குப் புரியாத இந்தி பேரில் சூட்டி உள்ளது என்றும்; மதசார்பின்மை, ஒற்றுமை என்ற சொற்கள் பா.ஜ.க.வுக்குப் பிடிக்காது என்பதால், தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய காந்தியையும் அவர்களுக்கு பிடிக்காது என்பதால், உலகம் முழுவதும் அடையாளமாக இருக்கும் தேசத் தந்தை காந்தியின் பெயரையே நீக்கி உள்ளதைக் கண்டித்து இந்தியா கூட்டணி கட்சிகள் ஒன்று கூடி மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் நடத்திப் போராடியுள்ளன.

“பச்சைத் துண்டு போட்டுப் பச்சை துரோகம் செய்கிறார்” என்று எடப்பாடி பழனிச்சாமி மீது குற்றச்சாட்டி தமிழ்நாடு முதல்வர் பேசியுள்ளார். “100 நாள் வேலைத் திட்டத்தின் உண்மையான நோக்கத்தை ஒன்றிய அரசு அழித்துவிட்டது. இதில் செய்யப்பட்ட மாற்றங்களைத் திரும்பப் பெற வைப்போம்” என்று நெல்லை அரசு விழாவில் முழக்கமிட்டு உள்ளார். கபட நாடகம் நடத்தி வரும் காந்தி தேசத்துக் காவி வேடதாரிகளை, தளபதி ஸ்டாலின் தலைமையில் மக்கள் முன்பு அடையாளப் படுத்தி நிறுத்துவோம்!